பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 06 2024 **WEDNESDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள் - தலைப்புச் செய்திகள்

- அவசர நிலை காலத்தின் பாதிப்புகளை இன்றைய தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழக சட்டப்பேரவையின் நடப்பு கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களில் பங்கேற்பதிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்
- விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

நாட்டில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட அவசர நிலையின் பாதிப்புகள் குறித்து தற்போதைய இளையோர் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, அவசர நிலையை கண்டித்து பேசியது வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகம் எவ்வாறு பாதிப்புக்குள்ளானது என்பதை அவசர நிலை பிரகடனம் எடுத்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனம் எவ்வாறு சீரழிக்கப்பட்டது என்பதற்கு அவசரநிலை தான் மிகச் சிறந்த உதாரணம் என்று பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக, மக்களவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கும் முன், அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட தினம் நமது வரலாற்றின் கருப்புப் பக்கங்களாகும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவசர நிலையை பிரகடனம் செய்ததன் மூலம், அம்பேத்கரின் அரசியல் சாசனத்திற்கு குந்தகம் விளைவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

சர்வாதிகாரப் போக்குடன் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டபோது, ஜனநாயக மாண்புகள் பறிக்கப்பட்டதாகவும், கருத்து சுதந்திரம் ஒடுக்கப்பட்டதாகவும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

இதற்கிடையே, தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதன் 50வது ஆண்டு நினைவை ஒட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவசர நிலையை பிறப்பித்ததற்காக காங்கிரஸ், மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

நாட்டின் வரலாற்றில் அவசர நிலை ஒரு கரும்புள்ளி என்று மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் கூறியுள்ளார்.

தற்போதைய தலைமுறையினர் இதனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இன்று சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, நடப்பாண்டில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையுடன், சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 130 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஊக்கத்தொகை வழங்குவது செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் 200 கோடி ரூபாய் செலவில் மின்மாற்றிகள் நிறுவப்படும் என்று மின்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

குறைந்த மின்அழுத்த பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தில் தேரோடும் வீதிகளில் செல்லும் மேல்நிலை மின்கம்பிகள், புதைவடங்களாக மாற்றியமைக்கப்படும் என்று அவர் கூறினார்.

திருப்பூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் 211 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய துணைமின்நிலையங்கள் ஏற்படுத்தப்படும் உள்ளிட்ட 19 அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

>>>><<<<

இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மனநல சேவைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அயலக தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், 103 முகாம்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

பொது சுகாதாரத்துறையுடன் இணைந்து இந்த முகாம்கள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மண்டபம் முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழில் வாய்ப்புகள் உருவாக்கித்தரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

தமிழக சட்டப்பேரவையின் நடப்பு கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களில் பங்கேற்பதிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்

இன்று பேரவை கூடியதும் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று அஇஅதிமுக உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு இதர பிரச்சினை குறித்து விவாதிக்க, அவை விதிகளில் அனுமதி இல்லை என்று கூறி பேரவைத் தலைவர், அஇஅதிமுகவின் கோரிக்கையை நிராகரித்தார்.

இதனையடுத்து, அஇஅதிமுக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, அவை காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, அஇஅதிமுக உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்யும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

>>>><<<<

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை மாநில அரசே நடத்த முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தயங்கவது ஏன் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், முந்தைய அஇஅதிமுக அரசால் நியமிக்கப்பட்ட குலசேகரன் ஆணையத்திற்கு திமுக அரசு ஆறு மாதம் கால நீட்டிப்பு வழங்கியிருந்தாலே சாதிவாரி கணக்கெடுப்பு தற்போது முடிவடைந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆணையத்திற்கு திமுக அரசு நீட்டிப்பு வழங்காதது ஏன் என்றும் திரு. அண்ணாமலை வினவியுள்ளார்.

>>>><<<<

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும் பாமக நிறுவனர் மருத்துவர ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கு மத்திய அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது என்று கூறுவது தவறானது என்று குறிப்பிட்டுள்ளார்.

பீகார் அரசு நடத்திய சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு செல்லும் என்று அம்மாநில உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளதாகவும் திரு. ராமதாசு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

திமுக, பாமக, நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 29 பேர் களத்தில் உள்ளனர்.

இந்த தொகுதியில் அடுத்த மாதம் 10ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை 13ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 60 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பூரில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநகர காவல்துறை ஆணையர் திரு. பிரவின் குமார் பரிசுகளை வழங்கினார்.

>>>><<<<

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் உள்ள அரசு பள்ளியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>><<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பத்திரிகையாளர் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கான பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை ஆட்சியர் திருமதி. சரயு இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Harman Preet Singh தலைமையிலான இந்த அணியில் 16 பேர் இடம்பெற்றுள்ளனர்.

Sreejesh அணியின் கோல் கீப்பராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் மற்றும் Dhinidhi Desinghu தகுதி பெற்றுள்ளனர்.

>>>><<<<

ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவில் Vishal Harishchandra Shilimkar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் Anuj Kumar–ம், 60 கிலோ எடைப்பிரிவில் Sitender-ம், 92 கிலோ எடைப்பிரிவில் Arjun Ruhil-ம், 110 கிலோ எடைப்பிரிவில் Jospooran Singh-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் ஜூடோ போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Tulika Maan தகுதி பெற்றுள்ளார்.

>>>><<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 31 பேர் கொண்ட உத்தேச இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>END<<<<